அரசாங்க நிருவாக சுற்றறிக்கை இலக்கம் : 29/95 (111)

எனது இல: 11/706/ச206/56/டீஏ/32.

அரசாங்க, நிருவாக, உள்நாட்டலுவல்கள், பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு.

சுதந்திர சதுக்கம்,
கொழும்பு-07.
1998.05. 28 ஆந் தேதி.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்கள் ;
திணைக்களத் தலைவர்கள் யாவருக்கும் ,

**பயங்கரவாத அச்சுறுத்தல்கள் நிலவுகின்ற பிரதேசங்களில் சிவில் நிருவாகத்தில் ஈடுபட்டுள்ள அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவு.**

1995.09.22 ஆந் திகதிய 29/95 ஆம் இலக்க, 1996.05.20 ஆந் திகதிய 29/95(1) ஆம் இலக்க, 1996.09.11 ஆந் திகதிய 29/95(11) ஆம் இலக்க சுற்றறிக்கைகளின் பால் உங்களது கவனம் ஈர்க்கப்படுகிறது.

02. கீழே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரப் பிரதேசங்களில் சிவில் நிருவாகத்தில் ஈடுபட்டுள்ள அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு 1997.11.12 ஆந் திகதிய அரசாங்க நிருவாக சுற்றறிக்கை 2/97(111) ஆம் இலகத்தினால் திருத்தம் செய்யப்பட்ட 1997.01.15 ஆம் திகதிய அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 2/97 ஆம் இலக்க புதிய சம்பளச் சுற்றறிக்கையின் பிரகாரம் திரட்டிய வேதனத்தில் இருந்து 12 1/2% க்குச் சமனான கொடுப்பனவொன்றினை ஊக்குவிப்புக் கொடுப்பனவாக செலுத்துவதற்கு அரச தீர்மானித்துள்ளது.

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு |
|---|---|
| பொலநறுவை | 1. மெதிரிகிரிய |
| | 2. லங்காபுர |
| | 3. திம்புலாகல |
| | 4. தமன்கடுவ |
| அநுராதபுரம் | 1. நுவரகம்பலாத்த மத்திய/ விலச்சிய |
| | 2. மதவாச்சி |
| | 3. கெபிதிகொல்லாவ |
| | 4. பதவிய/ வெலிஓயா |
| | 5. கஉறாடகஸ்திகிலிய |
| | 6. ஹொறாவெப்பதான |
| | 7. நொச்சியாகம |

| | | |
|---|---|---|
| | 8. | கலென்பிந்துனுவெவ |
| | 9. | பளுகஸ்வெவ |
| புத்தளம் | 1. | கற்பிட்டி |
| | 2. | வனாத்தவில்லு |
| | 3. | கருவலகஸ்வெவ |
| மட்டக்களப்பு | 1. | எல்லா பிரதேசச் செயலாளர் பிரிவுகளும். |
| அம்பாறை | 1. | தெஉ றி அத்த கண்டிய தவிர்ந்த எல்லா பிரதேசச் செயலாளர் பிரிவுகளும் |
| திருகோணமலை | 1. | எல்லா பிரதேசச் செயலாளர் பிரிவுகளும். |
| வவுனியா | 1. | எல்லா பிரதேச செயலாளர் பிரிவுகளும் |
| மன்னார் | 1. | எல்லா பிரதேச செயலாளர் பிரிவுகளும். |
| யாழ்ப்பாணம் | 1. | எல்லா பிரதேச செயலாளர் பிரிவுகளும். |
| | 2. | எல்லாத் தீவுகளும் |
| கிளிநொச்சி | 1. | எல்லா பிரதேச செயலாளர் பிரிவுகளும். |
| முல்லைத்தீவு | 1. | எல்லா பிரதேச செயலாளர் பிரிவுகளும் |
| மொனராகலை | 1. | சியம்பலாண்டுவ பிரதேச செயலாளர் பிரிவு |

03. கொடுப்பனவுகளை வழங்குதல் 1997.01.01 ஆந் திகதி முதல் 1998.12.31 ஆந் திகதி வரை அல்லது பிரதேசத்தில் பயங்கரவாத நடவடிக்கைகள் இல்லையென அரசு அறிவிக்கும் தினம் வரை ஆகிய இரண்டிலும் எது முந்துகிறதோ அன்றைய திகதி வரை மட்டும் நடைபெறல் வேண்டும்.

04. நிரந்தரச் சேவைக்கு உட்படாத உத்தியோகத்தர்கள் தொடர்பாக இக் கொடுப்பனவுகள் அவர்கள் கடமை புரிகின்ற நாட்களை அடிப்படையாகக் கொண்டு செலுத்தப்படல் வேண்டும்.

05. சம்பந்தப்பட்ட மாதத்திற்குள் உத்தியோகத்தரினால் பெற்றுக்கொள்ளப்படுகின்ற பொதுவான லீவுகளுக்கு சரிசமவிகிதமாக ஊக்குவிப்புக் கொடுப்பனவு குறைக்கப்படல் வேண்டும்.

06. பயங்கரவாத அச்சுறுத்தல்கள் உள்ள பிரதேசங்களில் நிரந்தரக் கடமைகளில் ஈடுபடாத, ஆனால் அடிக்கடி அப்பிரதேசங்களில் கடமைக்காக இணைக்கப்படுகின்ற உத்தியோகத்தர்களுக்கு அவர்கள் அவ்வாறு இணைக்கப்பட்டு கடமையாற்றுகின்ற நாட்களுக்கு சரிசமவிகிதமாக கொடுப்பனவு செலுத்தப்படுதல் வேண்டும்.

07. சம்பந்தப்பட்ட பிரதேசங்களில் கடமை புரிகின்ற எல்லா அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் 5/97 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தனியார் திடீர் விபத்து மறைப்புக் காப்புறுதிக்கு (விபத்துக் காப்புறுதிக்கு) மற்றும் கடன் பாதுகாப்புக் காப்புறுதி முறைக்கு உட்படுவதன் மூலம் அவர்களுக்குப் பெற்றுக் கொள்ள முடியுமான பயன்கள் பற்றி அறிவூட்டுவதற்கு திணைக்களத் தலைவர்கள் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

08. இதற்குத் தேவைப்படுகின்ற மேலதிக நிதி சம்பந்தப்பட்ட நிறுவனத்தின் வளத்திலிருந்து அல்லது செலவுத்தலைப்புகளின் சேமிப்பில் இருந்து பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

09. இந்தச் சுற்றறிக்கையானது பொதுத் திறைசேரியின் இணக்கத்துடன் வெளியிடப்படுகிறது.

ஒப்பம் /பீ.ஏ. சேனாரட்ண
செயலாளர்

அரசாங்க, நிருவாக, உள்நாட்டலுவல்கள்,
பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு.

insf/11/1